## ஜூலை 14

**மனன வசனம்**

**அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத் தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்க ளெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர் களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். அப்போஸ்தலர் 2:46,47.**

**ஆராய்ச்சிக்கு**

*அப் 2:42-46; அப் 4:34,35; அப் 3:1-26; அப் 4:1-18; அப் 5:1-11; அப் 5:34-39.*

ஜூலை 14 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 3

# ஆதிகாலச் சபையின் அனுபவம்



துரிதமாகச் செயல்படுவதற்கான நேரம் வந்து விட்டதை ஆதிகாலச்சபையினர் அதிகம் உணர்ந்தனர். மேசியாவின் ராஜ்யம் எப்போது ஸ்தாபிக்கப்படுமென் கிற கேள்விக்கு இயேசு சொன்ன பதிலிருந்து, ஆவி யானவர் அருளப்பட்டு, அப்போஸ்தலர்களின் ஊழி யப்பணி நிறைவேறியபிறகே ஆண்டவர் வருவா ரெனப் புரிந்துகொண்டார்கள். அப் 1:6-8. எனவே, பெந்தெகொஸ்தே நாள் வந்து, ஆவியானவரைப் பெற்றபோது, நிறைவேறவேண்டிய யாவும் நிறை வேறிவிட்டதாக ஆதிகால விசுவாசிகள் நம்பினார்கள். அப்போஸ்தலர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டுச் செல்லாவிட்டாலும், உலகின் பல பகுதிகளில் வசித்த வர்கள் அவர்களை நாடி வந்து, சுவிஷேத்தைக் கேட்ட தால், உலகெங்கும் சுவிஷேத்தை எடுத்துச் சென்றதாக நினைத்துக்கொண்டார்கள். அப் 2:5-11.

அடுத்ததாக, உலகப்பொருட்கள் மேலான பற்று களை சபையார் விட்டொழித்தார்கள். காலம் நெருங்கி விட்டதைஉணர்ந்து, தங்களிடம் உள்ள அனைத்தையும் விற்றார்கள்; சத்தியத்தை அறிவதற்கும் ஐக்கியத்தை வளர்ப்பதற்கும் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். ஆனாலும் இயேசுவைத் தொடர்ந்து அறிவித்துவந்தார் கள்; அதுவும் எருசலேமில் மட்டுமே. அவர்கள் உரு வாக்கிய சமூக வாழ்க்கையின் பாணியானது ஏழை களுக்கு உதவிசெய்கிற விஷயத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டது; ஆனால் சீக்கிரமே பிரச்சனைகள் தலை தூக்கின; சபையார் ஒற்றுமையோடு இருப்பதற்கு தேவன் தலையிடவேண்டியிருந்தது. அந்தச்சமயத்தில் தான் அவர்களுக்கு எதிர்ப்புகளும் உருவாயின. எல் லாற்றிற்கு மத்தியிலும் அவர்களுடைய விசுவாசம் அசைக்கப்படாமல் இருந்தது.

*2018, ஜூலை 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஜூலை 15

## உபதேசித்தலும் அந்நியோந்நியமும்

பெந்தெகொஸ்தே அனுபவத்தைச் சொல்லிவிட்டு, எருசலேமின் சபைக்குள் காணப்பட்ட அனுபவத்தை லூக்கா சொல்லத் துவங்குகிறார். 'அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம்பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.' அப் 2:42. மேலே சொல்லப்படுகிற நான்கு விஷயங்களுமே உபதேசம் ஐக்கியம் பற்றியவையே. தேவாலயத்தில் உபதேசித்தார்கள்; தனிநபர் வீடுகளில் தங்களுக்குள் ஐக்கியத்தை உண்டாக்கிக்கொண்டார்கள். வச 46.

தேவாலய வளாகத்தைச் சுற்றிலும் கூரையுடன் கூடிய திண்ணைகள் இருந்தன; ரபிமார்கள் அங்கிருந்து மக்களுக்குப் போதிப்பதுண்டு. அப்போஸ்தலர்களின் போதனைகளைக் கேட்பதற்கு விசுவாசிகள் ஆவலோடு சென்றார்கள்; ஆவியின் வரத்தைப் பெற்றவர்கள் தேவாலயப் போதகர்களிடம் செல்லாமல் அப்போஸ்தலர்களின் ஆழமான போதனைகளைக் கேட்கச் சென்றார்கள். அப்போஸ்தலர்கள் அநேக அற்புதங்களோடும் அடையாளங்களோடும் அதிகாரத்தோடும் போதித்தார்கள். அப் 2:43.

ஆதிகாலக் கிறிஸ்தவர்களின் பக்திக்கு ஆவிக்குரிய அந்நியோந்நியம் ஓர் அடையாளமாகும். விசுவாசிகள் எப்போதும் தேவாலயத்திலும் வீடுகளிலும் சேர்ந்தே இருந்தார்கள்; கபடமில்லாமல் போஜனம்பண்ணி, திருவிருந்திலும் ஜெபத்திலும் தரித்திருந்தார்கள். அப் 2:42,46. இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்று விசுவாசித்ததாலேயே இவ்வாறு தினம்தினம் மகிழ்ச்சியோடே களித்தார்கள்; மேசியாவின் ராஜ்யத்தில் அவரோடு சேர்ந்து இருக்கப்போகும் நாளை எதிர்பார்த்தார்கள். மத் 26:29.

ஆதிகாலச் சபையின் அனுபவத்தில் விசுவாசிகள் அவரவர் வீடுகளில் கூடிவந்தது குறிப்பிடத்தக்கது. அனுதின ஆலய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள். அப் 3:1. ஓய்வுநாட்களில் சக யூதர்களோடு ஜெபாலயங்களில் கூடினார்கள். யாக் 2:2. ஆனால் கிறிஸ்தவ அனுபவத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் எல்லாம் வீடுகளில்தாம் நடைபெற்றன.

**ஆரம்பக்காலக் கிறிஸ்தவர்கள் அந்நியோந்நியமாக இருந்ததில் காணப்பட்ட முக்கிய விஷயம் என்ன? அப் 2:44,45; 4:34,35**

முடிவு சீக்கிரம் இருக்கிறதென்று உணர்ந்து, உலகப்பொருட்களை, அதாவது, தங்கள் 'சொத்துக்களை' பெரிதாக எண்ணவில்லை. அதனால்தான் தங்களிடமிருந்ததை பொதுவாக வைத்து அனுபவித்தார்கள். மேசியாவின் ராஜ்யத்தில் அவர்தாமே தங்கள் தேவைகளை எல்லாம் சந்திக்கப்போகிறார் என்பதால், நாளைய தினத்தைக் குறித்து அவர்கள் கவலைப்படவில்லை. லூக் 22:29,30. இவ்வாறு பகிர்ந்துகொடுத்தது, கிறிஸ்தவ தயாளத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தது; ஆழமான ஒற்றுமை உணர்வையும் உண்டாக்கியது.

ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்திருப்பவற்றில் எவ்வளவு தயாளமாக நடக்கிறீர்கள்?

## சப்பாணியான ஒருவனைக் குணப்படுத்துதல்

பேதுருவும்யோவானும்மூன்று மணி ஜெபத்தில்கலந்துகொள்வதற்காக தேவாலயத்திற்குச் சென்றார்கள். அப் 3:1. ஆரம்பக் காலச் சபையின் விசுவாச அனுபவத்தில் யூத முறைமைக்கு தனி இடம் இருந்தது. பிரசங்கம் பண்ணவும், புதிதாக மக்களை சபையில் சேர்க்கவும் மட்டுமே அப்போஸ்தலர்கள் ஆலயம் செல்லவில்லை; பேதுருவும் யாக்கோபுவும் யூதர்கள்; யூத முறைமைகளை தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். அப் 20:16; 21:17-26. அங்கே ஆச்சரியமூட்டும் ஓர் அற்புதத்தைச் செய்தார்கள். அப் 3:1-10. அதனால், தேவாலயத்தில் பிரசங்கம்பண்ணுவதற்கு வாய்ப்பு கிடைத்தது.

**பேதுரு தன் பிரசங்கத்தில் வலியுறுத்திவை யாவை? அப் 3:12–26.**

**ஐந்து முக்கிய விஷயங்களை வலியுறுத்துகிறார்:**

1. கிறிஸ்துவே பாடுகளை அனுபவித்த மேசியா (அப் 3:18)
2. தேவன் அவரை உயிரோடு எழுப்பினார் (அப் 3:15)
3. இயேசு பரலோகத்தில் மகிமைப்படுத்தப்பட்டார் (அப் 3:13)
4. அவர் மீண்டும் வருவார் (அப் 3:19)
5. பாவம் மன்னிக்கப்பட, மனந்திரும்பவேண்டும். (அப் 3:20)

இன்றும் இதே செய்தியைத்தான் நாம் அறிவிக்கிறோம்; ஆனால் நம் பின்னணி வேறாக இருக்கலாம். அப்போஸ்தலர்கள் யூதமுறைமைகளை விடுவிடவில்லை. தங்கள் மதநம்பிக்கைகளை 'விட்டுவிடுவதற்குப்' பதிலாக, பழைய உடன்படிக்கையிலிருந்து புதிய உடன்படிக்கைக்கு மாறினார்கள். தேவனுடைய பிள்ளைகளாக மேசியாவை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது; இயேசுவை மெய்யாகவே ஏற்றுக்கொள்வதால் உண்டாகும் புதுப்பிறப்பை அனுபவிப்பது அவசியமாக இருந்தது.

இன்று வேறொரு சூழ்நிலையில் நாம் வாழலாம்; ஆனால் சொல்லவேண்டிய செய்தி அதேதான். கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்தார், உயிர்த்தெழுந்தார், மறுபடியும் வரப்போகிறார். வெளி 14-ன் முத்தூதைப் பிரசங்கிக்கும்போதும், இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதையும், இயேசு கிறிஸ்து மீண்டும் உயிர்த்தெழுந்ததையும், இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போவதையுமே முக்கியமாக அறிவிக்கவேண்டும்.

''அனைத்து கிறிஸ்தவர்களிலும் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகளே உலகத்தில் கிறிஸ்துவை அதிகமாக மேன்மைப்படுத்த வேண்டும். மூன்றாம் தூதனின் தூதைச் சொல்லும்போது ஓய்வுநாளின் சத்தியத்தை அறிவிக்கவேண்டும். இதையும், அதில் சொல்லப்படும் மற்ற சத்தியங்களையும் அறிவிக்கவேண்டும். ஆனால் அனைத்திற்கும் மையமான கிறிஸ்து இயேசுவைச் சொல்லாமல் விட்டுவிடக்கூடாது. கிறிஸ்துவின் சிலுவையில்தான் இரக்கமும் சத்தியமும் சந்திக்கின்றன; நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தமிடுகின்றன. கல்வாரியை நோக்கிப் பார்க்கும்படி, பாவியை வழிநடத்தவேண்டும்; ஒரு சிறு பிள்ளையைப் போன்ற விசுவாசத்துடன் அவன் இரட்சகரின் புண்ணியங்களை நம்பவேண்டும், அவருடைய நீதியை ஏற்றுக்கொள்ளவேண்டும், அவருடைய இரக்கத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும்.'' - *EGW, GW, p 156,157.*

செவ்வாய், ஜூலை 17

## எதிர்ப்பு வலுத்தது

சீக்கிரமே சபையின் வளர்ச்சிக்கு எதிர்ப்பு உண்டானது; எருசலேமின் தலைவர்கள் சிலர்தாம் அதற்குக் காரணம். பிரதான ஆசாரியனும், அவருடைய கூட்டாளிகளும்தான் எருசலேம் தேவாலயத்தைக் கவனித்துவந்தார்கள்; அவர்களில் பெரும்பாலானவர்கள் சதுசேயர்கள். பிரதான ஆசாரியன்தான் சனகெரிம் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார்; அந்தச் சங்கத்திலும் பெரும்பாலும் சதுசேயர்களும் பரிசேயர்களுமே இருந்தார்கள். சதுசேயர்கள் உயிர்த்தெழுதலை நம்பவில்லை; எனவே இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று பேதுருவும் யோவானும் பிரசங்கம்செய்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. எனவே இருவரையும், தேவாலயக் காவலர்கள் கைதுசெய்து, மறுநாள்மட்டும் காவலில் வைக்கிறார்கள்; அதன்பிறகு சங்கத்திற்குமுன் ஆஜராக்குகிறார்கள். அப் 4:1-7.

**'யாருடைய அதிகாரத்தினாலே இப்படிச் செய்தீர்கள்' என்று கேட்டபோது, பேதுரு சொன்ன பதில் என்ன? அப் 4:1–18. பேதுரு சொன்னதிலுள்ள என்ன விஷயம் தலைவர்களுக்கு அதிக அச்சுறுத்தலைக் கொடுத்திருக்கும்?**

தங்கள் அதிகாரம் பறிபோகுமோவென யூதத்தலைவர்கள் பயந்தது புரிகிறது. இயேசுவின் நாமத்தினால் அற்புதத்தைச் செய்ததாக பேதுரு சொல்கிறார்; அதோடு அவரால்மட்டுமே இரட்சிப்பு உண்டென்றும் கூறுகிறார். அதிகாரமிக்க யூதச்சங்கத்திற்கு முன்பாக அப்போஸ்தலர்கள் நின்றாலும், தங்களுக்கும் மேலான அதிகாரமுள்ளவர்களை தாங்கள் சேவிப்பதை அறிந்திருந்தார்கள். கலிலேயர்களான அவர்கள், படிப்பறிவில்லாத சாதாரண மீனவர்கள்; ஆனாலும் அவர்களுடைய தைரியமும் பேச்சுத்திறனும் அங்குள்ளவர்களைத் திகிலடையச் செய்தன. இயேசு முன்னுரைத்திருந்ததுபோல, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தார்கள். மத் 10:16-20. அங்கிருந்த தலைவர்களுக்குத்தான் அது தெரியவில்லை.

குணமாக்கப்பட்ட மனிதன் மக்கள் மத்தியில் நின்றிருந்ததால், சனகெரிம் சங்கத்தார் அந்த அற்புதத்தை நிராகரிக்க முடியவில்லை; எனவே, பிரசங்கம் செய்யாமல் இருக்கும்படி அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டார்கள். அப்போஸ்தலர்களின் செய்திக்கும் பயந்தார்கள்; அவர்களுடைய இயக்கம் பிரபலமடைந்து வந்ததற்கும் பயந்தார்கள். குற்றச்சாட்டில் உண்மையிருக்கிறதா என்று விசாரிக்காமல், தவறான அபிப்பிராயத்தாலும், சுயநலத் தூண்டுதலாலும் தவறான நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

பேதுரு இறுதியாகச் சொல்கிற வார்த்தைகள் அப்போஸ்தலர் புத்தகத்திலேயே முத்தான வார்த்தைகள் ஆகும்: 'தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்குமுன்பாக நியாயமாய் இருக்குமோ? நீங்களே நிதானித்துப்பாருங்கள். நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே.' அப் 4:19,20.

எந்த நிலையிலும், எந்தச் சூழ்நிலையிலும் அதிகார வெறி ஆபத்தானதுதான். பிறருக்கு ஊழியம் செய்யவே கிறிஸ்தவர்கள் அழைக்கப்படுகிறார்கள்; எனவே, அதிகார ஆசை நம்மை மயக்கி இழுத்துவிடாமலிருக்க எவ்வளவு கவனமாக இருக்கவேண்டும்?

## அனனியா, சப்பீராள்

ஆதிகாலச்சபையில்பொருட்களைக்கொண்டுவந்துகுவிக்கவேண்டுமென்பது கட்டாயமல்ல; சபையில் அங்கத்தினர்களாவதற்கு அது நிபந்தனையாகவும் இருக்கவில்லை. ஆனால், சிலர் தாங்களாகவே கொண்டுவந்தார்கள்; அது பிறருக்கு ஊக்கமாக அமைந்தது. அப்படி கொண்டுவந்த ஒருவர்தான் பர்னபா. அப் 4:36,37. இப்புத்தகத்தின் பிற்பகுதியில் இவர் முக்கியப் பங்காற்றியதைப் பார்க்கிறோம்.

சபையின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவித்த சில மோசமான நபர்களும் இருந்தார்கள். சபைக்கு வெளியேயிருந்து எதிர்ப்பு கிளம்பிய சமயத்தில் இவர்கள் உள்ளேயிருந்து பிரச்சனையைக் கிளப்பினார்கள்.

**அப் 5:1–11இன் சம்பவத்திலுள்ள படிப்பினைகள் என்ன?**

---

லூக்கா எல்லா விபரங்களையும் எழுதவில்லை; அனனியாவும் சப்பீராளும் அந்தப் பணத்தை தாங்களே வைத்துக்கொண்டது அடிப்படை பிரச்சனையல்ல; ஆனால் சபைக் குடும்பத்திற்குள் வஞ்சகமாகச் செயல்பட்டதுதான் பிரச்சனை. ஏதோ ஒரு ஆசையில் அவர்கள் அப்படிச் செயல்படவில்லை; தெரிந்தே திட்டமிட்டு, 'கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கும்' விதத்தில் செயல்பட்டார்கள். அப் 5:9. தங்கள் சொத்தை விற்று, அதன் கிரயத்தை சபைக்குக் கொடுக்கும் கட்டாயம் எதுவும் இல்லை. எனவே, சுயநல எண்ணத்தோடு அதன் கிரயத்தை தாங்கள் தருவதாக வாக்குக் கொடுத்திருக்கவேண்டும். 'நற்பணி செய்கிறவர்கள்' என்று சக விசுவாசிகளின் பாராட்டைப் பெற்று, விசுவாசிகளின் மத்தியில் செல்வாக்கைச் சம்பாதிக்க நினைத்திருக்கலாம்.

இதனால்தான் தேவன் அவர்களை கடுமையாகத் தண்டித்திருக்க வேண்டும். இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்கிற உணர்வால்தான் சபையார் ஒற்றுமையோடு இருந்தார்கள்; அத்தகைய ஒற்றுமை மலர்ந்துவந்த சமயத்தில் அனனியாவும் சப்பீராளும் அவ்வாறு நடந்துகொண்டது தேவன்மேல் மெய்ப்பற்று வைப்பதின் முக்கியத்துவத்தைக் குறைத்துக்காட்டுவதாக இருந்தது; விசுவாசிகளின்மத்தியில் ஒரு மோசமான தாக்கத்தை உண்டாக்கியது. சப்பீராள் மனந்திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. அப் 5:8. ஆனால் அனனியாவுக்குக் கொடுக்கப்பட்டதுபோலத் தெரியவில்லை. சம்பவம் மிகச் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருப்பதால் லூக்கா அதைக் குறிப்பிடாமல் விட்டிருக்கலாம்.

ஆரம்பம்முதல் கடைசிவரையிலும் அவர்கள் கபடான இருதயத்தோடே நடந்தார்கள். தேவன் பாவத்தைப் பொறுத்துக்கொள்வதில்லை. எசே 18:20; ரோமர் 6:23. சில சமயங்களில் பாவத்திற்கு உடனே தண்டனை கிடைப்பதில்லை. பாவத்திற்கு உடனே தண்டனை கிடைக்காமலிருப்பது தேவன் எவ்வளவு கிருபையுள்ளவர் என்பதை நமக்கு நினைவூட்டவேண்டும். 2பேதுரு 3:9.

ஆதிகாலச் சபையில் இந்த இருவரும் கிருபையின் வரம்பை மீறிச் சென்றதுபோல நாம் சென்றுவிடாமல் இருப்பதற்கு, நாம் என்ன செய்யவேண்டும்?

வியாழன், ஜூலை 19

## இரண்டாவதாகக் கைதுசெய்யப்படுதல்

அனனியா-சப்பீராள் சம்பவத்தில், அப்போஸ்தலர் மூலம் பாவத்திற்கு தண்டனை வழங்கப்பட்டதென்றால், அவர்கள்மூலம் பாவிகளுக்குக் கிருபை வழங்கப்படாமல் இருந்திருக்குமா! ஆவியானவர் அவர்கள்மூலம் கிரியை செய்தார்; குணமாக்குதலின் ஊழியம் வல்லமையாக நடைபெற்றது. அப் 5:12-16. பேதுருவின் நிழல்பட்டால்கூட குணமாகலாமென மக்கள் நம்பினார்கள். இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டு, குணமான ஒரு பெண்ணின் சம்பவத்தை நற்செய்தி புத்தகங்களில் வாசிக்கிறோம். லூக்கா 8:43,44. பேதுருவின் நிழலுக்கு குணமாக்கும் வல்லமை இருந்ததாக லூக்கா சொல்லவில்லை; ஆனால் மக்கள் அப்படி நினைத்தார்கள். தேவனை முன்னிட்டு அப்படி உண்டான நினைப்பின் மூலமாகக்கூட தேவன் தம் கிருபையை மக்களுக்கு அருளினார்.

ஆவியில் நிறைந்து, அப்போஸ்தலர்கள் அற்புதங்களும் அடையாளங்களும் செய்தபோது, மதத்தலைவர்கள் அதிகமாகப் பொறாமையடைந்தார்கள். எனவே, இரண்டாவது முறையாக அப்போஸ்தலர்களைக் கைதுசெய்கிறார்கள். அப் 5:17,18. அற்புதவிதமாக தேவன் அவர்களை விடுவிக்கிறார். அப் 5:19-24. மீண்டும் தைரியத்தோடு பேச பேதுருவுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. ‘மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது’ என்கிறார். அப் 5:29. அப்போது தான் தங்கள் கைக்கும் அப்பாற்பட்ட ஒரு வல்லமை செயல்படுவதை அதிகாரிகள் சிலர் யோசிக்க ஆரம்பித்தார்கள்.

**சனகெரிம் சங்கத்தார் அப்போஸ்தலர்களைக் கொல்லாதபடி, அவர்களைத் தடுக்க கமாலியேல் எவ்வாறு முயன்றார்? அப் 5:34–39.**

சனகெரிம் சங்கம் சதுசேயர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது; பரிசேயர்கள் அதில் குறைந்தளவே காணப்பட்டார்கள். கமாலியேல் ஒரு பரிசேயர்; ஒரு நியாயசாஸ்திரி. யூதர்மத்தியில் கனம்பெற்றிருந்தவர். அவர் ரபீ என்று அல்ல, **ரபான்** என்று அழைக்கப்பட்டவர். ரபீ என்றால், **‘என் ஆசான்’**. ரபான் என்றால் **‘நம் ஆசான்’**. பவுலும் அவருடைய மாணவர்களில் ஒருவர். அப் 22:3.

இஸ்ரவேல் வரலாற்றில் சற்றுமுன் நிகழ்ந்த இரண்டு கலகங்களை அவர் ஞாபகப்படுத்துகிறார். அந்தக் கலகங்களுக்கு ஆதரவு தெரிவித்தவர்கள், குழப்பத்தை உண்டுபண்ணினார்கள். ஆனால் அவர்களுடைய தலைவர்கள் கொல்லப்பட்டு, ஆதரவாளர்கள் முற்றிலும் சிதறிப்போனார்கள். எனவே, இந்தக் கிறிஸ்தவ இயக்கமும் மனிதனால் உண்டாயிருந்தால், சீக்கிரம் கலைந்துபோகும் என்றார். மாறாக, அப்போஸ்தலர்கள் சொல்வதுபோல அது தேவனால் உண்டாயிருந்தால், எவ்வாறு அதை எதிர்க்கமுடியும்? கமாலியேலின் இந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, அப்போஸ்தலர்களை அடித்து, இயேசுவின் நாமத்தினால் பேசக்கூடாதென எச்சரித்து அனுப்பிவைத்தார்கள்.

நல்ல ஆலோசனை எவ்வளவுக்கு அவசியமான ஒன்று? நாம் கேட்க விரும்பாத ஆலோசனையே கிடைத்தாலும், ஆலோசனைகேட்பவர்களாக இருக்க நாம் என்ன செய்யவேண்டும்?

## வெள்ளி, ஜூலை 20

## மேலும் படிக்க:

‘‘நாம் உக்கிராணக்காரர்கள். இப்போது நம்மோடு இல்லாத நம் ஆண்டவர் யாருக்குச் சேவைசெய்யும்படி இந்த உலகத்திற்கு வந்தாரோ, அந்த மக்களையும் ஊழியப் பொறுப்புகளையும் நம்மை நம்பி ஒப்படைத்திருக்கிறார். நம் கட்டுப்பாட்டில் விட்டுவிட்டு, அவர் பரலோகத்திற்குச் சென்றிருக்கிறார்; அவரது வருகையை நாம் எதிர்பார்த்து, காத்திருப்பதை அவர் விரும்புகிறார். எதிர்பாராத நேரத்தில் அவர் வரும்போது, நாம் தூங்குகிறவர்களாகக் காணப்படாதபடிக்கு, நம்மிடம் அவர் தந்தவற்றில் உண்மையாக இருப்போம்.’’ - *EGW, 8T, p 37.*

‘‘தேவ நோக்கத்திற்காகப் பாடுபடுவதாகச் செய்த உறுதிமொழிகளும் பொருத்தனைகளும் எவ்வளவு பரிசுத்தமானவை என்பதை மக்களுக்கு உணர்த்தவேண்டும். ஆனால், ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு எழுதிக்கொடுக்கிற உறுதிமொழிப் பத்திரம்போல, இந்த உறுதிமொழிகளில் பொதுவாக யாரும் அக்கறையுடன் நடப்பதில்லை. தேவனிடம் செய்யப்பட்ட உறுதிமொழி என்பதால், அதற்குக் கட்டுப்பட வேண்டாம் என்றும், அது புனிதம் குறைந்தது என்றும் அர்த்தமா? சட்டரீதியாக எழுதிவாங்கி, சட்ட ரீதியாகக் கட்டாயப்படுத்த முடியாததால், தான் கொடுத்த வாக்கைச் செய்யாமல் கிறிஸ்தவன் மீறலாமா? தேவநோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட உறுதிமொழியைவிட அதிக கடமைமிக்க உறுதிமொழிப் பத்திரமோ ஒப்பந்தமோ வேறு எதுவும் இருக்கமுடியாது.’ - *EGW, 6SDABC, p 1056.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. இயேசு தம் சீடர்களுக்கு விட்டுச்சென்றவற்றில் இரண்டு முக்கியமானவை: அவருடைய சீக்கிர வருகையை எதிர்பார்த்திருப்பதும், ஊழியப்பணி செய்வதும்தான். இந்த இரண்டு காரணிகளும், ‘‘நாம் உலகத்திற்கு நற்செய்தியை அறிவிக்கவேண்டும்’’ என்பதில் என்ன தாக்கத்தை உண்டாக்கவேண்டும்?

2. ‘இயேசு இன்று வருகிறார் என்பதுபோல ஆயத்தமாக இருக்கவேண்டும், ஆனால் அவர் வருவதற்கு இன்னும் நூறு ஆண்டுகள் ஆகும் என்பதுபோல சபையின் ஊழியப்பணியை செய்யவேண்டும்’ என்று ஒருவர் சொன்னார். இது எவ்வளவுக்கு உண்மையானது? தேவன் நமக்குத் தந்திருக்கிற அழைப்பில் இதை நாம் எவ்வாறு அப்பியாசிக்கலாம்?

3. இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், வருகை ஆகியவை ஏன் எப்போதுமே நம் பிரசங்கத்தின் மையமாக இருக்கவேண்டும்? இந்த நிகழ்வுகள் இல்லாமல் வேறு எதையாவது பிரசங்கிப்பதில் ஏதாவது பயன் இருக்குமா?

4. ஒருவர் நல்ல எண்ணத்தோடு இருக்கிறாரா, தீய எண்ணத்தோடு இருக்கிறாரா என்பதைக் காண்பது கடினம் என்பதை அனனியா-சப்பீராள் சம்பவத்திலிருந்து எவ்வாறு அறியமுடிகிறது?

5. கமாலியேல்போல இன்று செயல்படும் சில நபர்களை யோசியுங்கள். அல்லது, மற்றவர்களுக்கு ஒரு நல்ல கமாலியேலாக நீங்கள் இருக்கிறீர்களா? ஞானமான ஆலோசனைகொடுப்பது அல்லது பெறுவது மிகவும் நன்மையானது என்பதற்கு சில சம்பவங்களைக் கூறுங்கள். அவற்றிலிருந்து கற்ற பாடம் என்ன?